தமிழ் | Tamil

# உடலுறவு – அது உங்கள் முடிவு

**உங்கள் உடலைப் பற்றியும், உடலுறவு உங்களுக்கு தேவையா அல்லது எப்பொழுது தேவை என்பதைப் பற்றியும் உங்கள் சொந்த முடிவுகளை எடுக்க வேண்டியது முக்கியம்.**

## யார் எப்பொழுது உடலுறவு கொள்ள வேண்டும் என்பதை தீர்மானிக்கின்றனர்?

நீங்கள் தீர்மானிக்கிறீர்கள்:

- உங்களுக்கு உடலுறவு கொள்ள வேண்டுமா இல்லையா என்பதை
- ஒப்புக்கொண்ட பின்னரும், உடலுறவு கொள்வதை நிறுத்துவது
- உடலுறவு கொள்ளும் பொழுது நீங்கள் எதை செய்ய விரும்புகிறீர்கள் அல்லது விரும்பவில்லை என்பதை
- நீங்கள் எந்த விதமான உடலுறவை விரும்பிகிறீர்கள் என்பதை

## நான் எனக்கு உடலுறவு வேண்டாம் என்று தீர்மானித்தால் என்ன ஆகும்?

உடலுறவு கொள்ள வேண்டாம் என்று தீர்மானிக்க உங்களுக்கு எப்பொழுதும் உரிமை உண்டு.

உங்களுக்கு சரி என்று படவில்லையோ அல்லது நீங்கள் பாதுகாப்பாக உணரவில்லை என்றால், அது உடலுறவு கொள்வதற்கு சரியான நேரம் அல்ல. உடலுறவு அல்லாது நெருக்கமாக இருக்க மற்ற வழிகள் உள்ளன.

நீங்களும், யாருடன் உடலுறவு கொள்ள விரும்புகிறீர்களோ, அந்த துணைவரும், உடலுறவு கொள்வதற்கு முன் உடலுறவு கொள்ளவதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும்.

இதற்கு ஒப்புதல் என்று பெயர். உங்கள் ஒப்புதல் பெறாமல் யாராவது உங்களுடன் உடலுறவு வைத்துக் கொண்டால், அவர்கள் மேல் குற்றம் சாட்டப்படலாம்.

வெவ்வேறு வயதில் உடலுறவு வைத்துக் கொள்வது பற்றி சட்டங்களும் உள்ளன.

MULTICULTURAL CENTRE FOR WOMEN'S HEALTH

Sexual Health Victoria
Care
Education
Advocacy

# உடலுறவு – அது உங்கள் முடிவு

## பாதுகாப்பான உடலுறவு என்றால் என்ன?

பாதுகாப்பான உடலுறவு என்றால்:

- சம்பந்தப்பட்ட நபர்கள் தயாராக இருக்கும் போது உடலுறவு வைத்துக் கொள்வது
- உங்களையும், உங்களுடன் உடலுறவு கொள்ளும் துணைவரையும் பாலியல் ரீதியாக பரவும் நோய்த்தொற்றுகளிலிருந்து (STIs) பாதுகாத்துக் கொள்வது
- உங்களையும், உங்களுடன் உடலுறவு கொள்ளும் துணைவரையும் திட்டமிடாத கர்ப்பத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வது

நீங்கள் உடலுறவு கொள்வதற்கு முன் பாதுகாப்பான உடலுறவு மற்றும் கருத்தடை பற்றி பேசுவது ஒரு ஆரோக்கியமான உறவின் ஒரு முக்கிய பகுதியாகும்.



கருத்தடை வகைகள்




*STI* கள் மற்றும் *BBV* களில் இருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ள ஆணுறை அணியுங்கள்

*ஆதாரம்:*

*http://www.fpv.org.au/sex-its-your-decision*

### மேலும் விவரங்களுக்கு :

- உங்கள் மருத்துவரை அல்லது நர்ஸை அணுகவும்
- Family Planning Victoria's clinic [விக்டோரியா குடும்பக் கட்டுப்பாட்டு க்ளினிக்]கை அணுகவும்
- கலாச்சார ரீதியாகவும் மொழியியல் ரீதியாகவும் வேறுபட்ட பெண்களுக்கு Multicultural Centre for Women's Health [மகளிர் நலத்திற்கான பல கலாச்சார மையம்] த்திற்கு செல்லவும்.
- திருநங்கைகளுக்கான சேவைகளுக்கு Equinox க்கு செல்லவும்.
- ஆண்களுடன் உடலுறவு வைத்துக் கொள்ளும் ஆண்களுக்கு Pronto க்கு செல்லவும்.
- இளம் தன்பாலின சேர்க்கையில் ஈடுபடுகின்ற பெண், தன்பாலின சேர்க்கையில் ஈடுபடுகின்ற ஆண், இரு பாலியல், திருநங்கை மற்றும் இடையிலிங்கம் (LGBTI) நபர்களுக்கு Minus 18 க்கு செல்லவும்.
- LGBTI மக்களுக்கான தகவல், ஆதரவு மற்றும் சேவைகளுக்கு TouchBase க்கு செல்லவும்.
- ஒப்புதலுக்கான வயது பற்றிய அதிக தகவலுக்கு விக்டோரியா குடும்பக் கட்டுப்பாடு வலைத்தளத்தை பார்க்கவும்.

*கூற்று: மகளிர் நலனுக்கான பல கலாச்சார மையத்தின் ஆலோசனை மற்றும் ஒப்புதலுடன் இந்தத் தகவல் தயாரிக்கப்பட்டுள்ளது. துறவுரை: இந்த தகவல் இதழ் பொதுவான தகவல்களை மட்டுமே அளிக்கிறது. தனிப்பட்ட சூழ்நிலைகளைப் பொறுத்து, இதுபோன்ற பொதுத் தகவலின் பொருத்தமானது நபர் நபருக்கு மாறுபடும். உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகளுக்கு குறிப்பிட்ட மருத்துவ அல்லது சட்ட ஆலோசனையை நீங்கள் பெற வேண்டும். பதிப்புரிமை © இந்தக் தகவல் இதழின் தகவல்களின் பதிப்புரிமை விக்டோரியா குடும்பக் கட்டுப்பாடுக்கு (அல்லது, சில சந்தர்ப்பங்களில், மூன்றாம் தரப்பினருக்கு) சொந்தமானது மற்றும் பதிப்புரிமை சட்டம் 1968 க்கு உட்பட்டது. நீங்கள் இலாப நோக்கமற்ற கல்வி நிறுவனமாக இருந்தால், தகவல்களுக்கான துறவுரையை நீங்கள் சேர்த்துக் கொண்டால், எங்கள் பதிப்புரிமைக் கொண்ட தகவல்களை உங்கள் மாணவர்களுக்கு அளிக்கும் பொருட்டு, இனப்பெருக்கம் செய்யவோ அல்லது பகிர்ந்துக் கொள்ளவோ அனுமதிக்கிறோம். எங்கள் ஒப்புதல் படிவத்தை நீங்கள் பூர்த்தி செய்து சமர்ப்பதின் மூலம் எங்களுடைய எந்தவொரு உள்ளடக்கத்தின் இனப்பெருக்கம் அல்லது தகவல்தொடர்பு செய்ய எங்கள் முன் ஒப்புதல் பெறுவது தேவை.*